சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

பு.சா.1 நெடுமாறன் த /பெ சுப்பிரமணி , வயது -57

(எதிரி ஆஜர் )

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .-**

நான் சந்தை வியாபாரம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் சுமார் இரண்டு மூன்று நபர்கள் மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்நீதிமன்றம் தவிர வேறு நீதிமன்றங்களில் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. நானும் எதிரியும் சேர்ந்து பிளையுட் வியாபாரம் செய்தோம் என்றாலும் அதன் மூலமாகத்தான் எனக்கு எதிரிக்கும் பழக்கம் என்றாலும் சரியல்ல. நானும் எதிரியும் கவுன்சிலர்களாக பணியாற்றி வந்ததால் எனக்கு எதிரியை 10 ஆண்டுகளாக தெரியும். சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் கவுன்சிலராக பணியாற்றினேன் என்றால் சரிதான். நானும் எதிரியும் நான் கவுன்சிலராக இருந்த சமயத்தில் பலமுறை பணம் கொடுத்து வாங்கி உள்ளேன் என்றால் சரிதான். ஒவ்வொரு முறை எதிரிக்கு நான் பணத்தை கொடுக்கும் போதும் காசோலை பெற்று தான் பணத்தை கொடுப்பேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு பணத்தை தவிர மற்ற பணங்களை எதிரி எனக்கு திரும்ப செலுத்தி விட்டார் என்றால் சரிதான். இவ்வழக்கு பணத்தைப் பொறுத்து நான் காசோலை பெற்றுக் கொண்டு தான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரிதான். காசோலையை எதிரி பூர்த்தி செய்து கொடுத்தார். காசோலையை எதிரி தான் பின் தேதியிட்டு கொடுத்தார். பணம் பெற்ற அன்றிலிருந்து இரண்டு மாதங்கள் கழித்து பின் தேதியிட்டு காசோலையை பணத்தைப் பெற்ற அன்றே எதிரி என்னிடம் கொடுத்தார். பணத்தை கொடுப்பதற்கு முன்பே அந்த பணத்திற்கு ஈடாக காசோலையை பெற்றுக் கொண்டுதான் பணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். பெருந்தொகை என்பதால் காசோலை பெற்றுக் கொண்டு பணம் கொடுத்தேன். எதிரி கொடுத்த காசோலையானது அவரது தனிப்பட்ட பெயரில் கொடுத்தாரா அல்லது அவரது கடையின் பெயரில் கொடுத்தாரா என்றால் நான் கவனிக்கவில்லை. எதிரி

கொடுத்த இவ்வழக்கு காசோலையானது அவரது சொந்த பெயரில் வழங்கப்பட்டுள்ளதா அல்லது கடையின் பெயரில் வழங்கப்பட்டுள்ளதா என்று நான் இன்று வரை கவனிக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் பல நபர்களுக்கு பணம் கொடுத்து வாங்குகிறேன் என்றால் சரி அல்ல. எதிரிக்கு ரூபாய் 8 லட்சம் கடன் கொடுத்ததற்கு அரசாங்கத்திடம் நான் கணக்கு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. எனது வருமானத்தில் வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேனா என்றால் இல்லை எனது சிறு சேமிப்பில் இருந்து பணத்தை கொடுத்தேன். நானும் எதிரியும் சேர்ந்து பிளையுட் தொழில் செய்து வந்தோம் என்றாலும் அதில் பெரும் நஷ்டம் ஏற்பட்டது என்றாலும் நான் அவ்வாறு எதிரிடம் சேர்ந்து தொழில் ஏதும் செய்யவில்லை. நானும் எதிரியும் பிளையுட் தொழில் செய்யும்போது பங்குதாரர்களாக இருப்பதை எதிரி நிறுபனம் செய்தால் எதிரி வழக்கில் பணம் பெறவில்லை என்பது புலப்பட்டு விடும் என்றால் சரிதான் ஆனால் நானும் எதிரியும் பங்குதாரர்களாக இருந்ததில்லை. நானும் எதிரியும் சேர்ந்து பிளையுட் தொழில் செய்த போது கேரளாவிற்கு இருவரும் சென்றுள்ளோம் என்றால் இல்லை. எதிரி பணத்தை என்னிடம் கொடுத்து அதை கேரளாவில் இருக்கும் ஒருத்தருக்கு அனுப்புமாறு தெரிவித்ததால் நான் அனுப்பி உள்ளேன். அவ்வாறு இரண்டு மூன்று முறை கேரளாவில் உள்ளவர்களுக்கு நான் பணத்தை எதிரி தெரிவித்ததன் பேரில் அனுப்பி உள்ளேன். எதிரியின் காசோலை மூலமாகவும் நான் பணம் அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் காசோலையை எனது வங்கியில் செலுத்தி அந்தப் பணத்தை நான் கேரளாவில் உள்ளவர்களுக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எதிரியும் பங்குதாரர்களாக இருந்த சமயத்தில் எதிரி பல காசோலைகளை நான் எப்போதும் வைத்திருப்பேன் என்றாலும் அந்த காசோலையில் ஈடாக வைத்து கேரளாவிற்கு பணம் அனுப்புவேன் என்றாலும் தற்போதும் என் வசம் எதிரியின் காசோலைகள் பல உள்ளன. என்றாலும் சரியல்ல.நானும் எதிரியும் பங்குதாரர்களாக தொடங்கிய வியாபாரம் ஆனது பெரும் நஷ்டத்தில் முடிந்ததால் நான் முதலீடாக செய்த பணத்தை திரும்ப பெற வேண்டி என்னிடம் உள்ள எதிரியின் காசோலையை வைத்து மோசடியாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. கடந்த 19.10.2024 தேதியிட்ட சட்ட அறிவிப்பு என் வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். 16.10.2024 அன்று காசோலையை எனது வங்கி கணக்கில் செலுத்தினேன் என்றால் சரிதான். நான் எந்த தேதியில் இந்த காசோலை வழக்கு தாக்கல் செய்தேன்

என்றால் 2024 ஆம் வருடம் டிசம்பர் மாதம் தாக்கல் செய்தேன், ஆனால் தேதி ஞாபகம் இல்லை. இவ்வழக்கு காசோலையை தவிர எதிரியின் வேறு காசோலைகளோ புரோ நோட்டுகளோ என்னிடம் இல்லை என்றால் சரிதான்.